ஶ்ரீ:

விளம்பி ஹூ ஆவணி மீ
ஆகஸ்ட் - ஸெப்டம்பர் 2018

மலர்: 1
இதழ்: 5

ஶ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஶ்ரீ ஶ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





விளம்பி ஸூ ஆவணி மீ
ஆகஸ்ட் - ஸெப்டம்பர் 2018

ஸ்ரீ:

மலர்: 1
இதழ்: 5

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

6.30 - விஸ்வரூபம்
8.30 - திருவாராதனம்
9.45 - சாற்றுமுறை

**வியாழன் முதல் சனி வரை**

6.00 - விஸ்வரூபம்
7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 8.00 - திருவாராதனம், 9.00 - ஸயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay Designs

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004, போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

சென்ற மாதம் திறக்கப்பட்ட 'தேஶிக நூலகம்' நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. பல நூல்களோடு, - சிறியவர்கள்-பெரியவர்கள்-ஆண்கள்-பெண்கள் என - படிப்பவர்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டு வருவது, உற்சாகமூட்டுவதாக இருக்கிறது. இது மட்டுமல்ல; நம் 'தேஶிக ஸந்தேஶ' மாத வெளியீட்டிற்கான sponsorship-ஐயும் பக்தர்கள் ஏற்றுக்கொள்ள முன்வருவது நமக்கு ஊக்கமூட்டுகிறது.

ஆடி மாதம் - இப்போதெல்லாம் இது 'விஶேஷத் தள்ளுபடி' மாதமாகத்தான் முன்னிறுத்தப்படுகிறது. முன்பெல்லாம் இதை ஶூந்ய மாதம் என்று கணக்கிட்டு, இதில் மனுஷ்யர்களுக்கு ஶுப கார்யங்கள் செய்வதை ஒத்திப்போடுவர். ஆனால் நம் திருக் கோவிலைப் பொறுத்தவரையில், இது ஒரு விஶேஷ மாஸமாகும் - சூடிக்கொடுத்த நாச்சியாரின் (பத்து நாள்) திருவவதார-திருக்கல்யாண (திருவாடிப் பூரம்) உத்ஸவம் / கஜேந்த்ர மோக்ஷ (ஆடி கருடன்) உத்ஸவம் / ஸ்ரீ ஆளவந்தார் திருவவதார தினம் (ஆடி உத்திராடம்) எனக் கொண்டாடும்படியான மாஸமாக அமைகிறது. இவற்றின் நிழற் படங்களை, இந்த இதழில் கண்டு களிக்கலாம்.

ஸ்வாமி தேஶிகனின் 750-வது ஆண்டு கொண்டாட்டத்தின் அங்கமாக, இம்மாதம் அனேக திவ்ய தேஶங்களில் ஆங்காங்கே லோக-க்ஷேமார்த்தமாக அன்னாரின் அபீதி ஸ்தவம்/ அவர் விஷயமான பிள்ளையந்தாதி/ப்ரார்த்தனாஷ்டகம், இவைகளை 28-முறை கோஷ்டியாக ஸேவிக்கும் வைபவம் நடந்தது. நம் ஸந்நிதியிலும் அந்த உத்ஸவ பாராயணத்தில் ஸ்த்ரீ-புருஷர்கள் உட்பட திரளாக கலந்துகொண்டு ஸேவித்ததை, ஆசார்ய வள்ளல் திருச்செவி சாற்றியருளினார். ஸேவார்த்திகளும் ஸேவித்து தந்யரானார்கள்.

மற்றும், வழக்கமான கட்டுரைப் பகுதிகளுடன், ஆவணி மாத இதழ் இதோ உங்கள் கையில் ....

ஸ்ரீ:



ஸ்ரீ:



ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

மயிலாப்பூர், சென்னை-600 004
☎2495 3799 ★ Email:svdd.mylai@gmail.com ★ Website: www.svdd.com

## நமது தேவஸ்தானத்தின் ஸ்ரீ வேதாந்த தேசிகனின் 750வது திருஅவதார உத்ஸவத்தின் அங்கமாக

# விசேஷ உபன்யாசங்கள்

**16.08.18 முதல் 25.08.18 வரை - மாலை 6.30 முதல் 8.00 வரை**



ஸ்ரீபாஷ்யஸிம்மாசனாதிபதி **வில்லூர் நடாதூர் ஸ்ரீ.உ.வே. கருணாகராசார்ய ஸ்வாமி**

16.08.18 - "ஸ்ரீநடாதூரம்மாளும் ஸ்ரீதேசிகனும்"

17.08.18 - "ஸ்ரீச்ருதப்ரகாசிகாசார்யரும் ஸ்ரீதேசிகனும்"



கலைமாமணி **கல்யாணபுரம் ஸ்ரீ.உ.வே. ஆராவமுதாசார்ய ஸ்வாமி**

18.08.18 - "ஆரண தேசிகனும் வாரணம் தொலைத்தவனும்" (ஹரிகதா)

19.08.18 - "ஸ்ரீவிஷ்ணுசித்தன் தூய திருமகள்" (ஹரிகதா)



ப்ரவசன திலகம் **தாமல் ஸ்ரீ.உ.வே. ராமக்ருஷ்ணன் ஸ்வாமி**

20.08.18 - "ஸ்வாமி தேசிகனும் ராமனும்"

21.08.18 - "ஸ்வாமி தேசிகனும் கண்ணனும்"



முனைவர் **முகுந்தகிரி ஸ்ரீ.உ.வே.அனந்தபத்மநாபாசார்ய ஸ்வாமி**

22.08.18 முதல் 24.08.18 வரை

"ஸங்கல்ப ஸூர்யோதயம்"



முனைவர் **வேளியநல்லூர் ஸ்ரீ.உ.வே.நாராயணாசார்ய ஸ்வாமி**

25.08.18 - மாலை 4.00 முதல் 5.30 வரை

"ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்"

இங்ஙனம் - R.முகுந்தன், P.சேஷாத்ரி, N.கஸ்தூரிரங்கன் - தர்மகர்த்தாக்கள்

| விளம்பி வருட ஆவணி மாத பஞ்சாங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | |
| ஆகஸ்ட் / ஸெப்டம்பர் | ஆவணி | | | | | |
| 17.08.18 | 1 | ஸப்தமி | வெள்ளி | ஸ்வாதி | ஆவணி மாதப்பிறப்பு – பெரியாழ்வார் | |
| 18.08.18 | 2 | அஷ்டமி | சனி | விசாகம் | நம்மாழ்வார் | |
| 19.08.18 | 3 | நவமி | ஞாயிறு | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 20.08.18 | 4 | தசமி | திங்கள் | கேட்டை | தொண்டரடிப்பொடிகள் | |
| 21.08.18 | 5 | தசமி (6.32) / ஏகாதசி | செவ்வாய் | மூலம் | திருமால்வடை | |
| 22.08.18 | 6 | ஏகாதசி (10.36) / த்வாதசி | புதன் | பூராடம் | திருமால்வடை | |
| 23.08.18 | 7 | த்வாதசி (15.19) / த்ரயோதசி | வியாழன் | பூராடம் / உத்திராடம் | ஸேனைநாதன் | |
| 24.08.18 | 8 | அதிதி | வெள்ளி | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 25.08.18 | 9 | சதுர்த்தசி | சனி | திருவோணம் | கடை ச்ரவணம் ஸ்ரீஹயக்ரீவ ஜயந்தி – காலை ஸ்ரீஹயக்ரீவன், தேசிகன் திருமஞ்சனம் – மாலை தேசிகன் வீதி புறப்பாடு – ருக் உபாகர்மா | ச்ரவணம் ஸ்ரீ T.R. தேவநாதா சார்யர், ஹயக் ரீவர் ஸ்ரீ R. வாஸுதேவன் |
| 26.08.18 | 10 | பௌர்ணமி | ஞாயிறு | அவிட்டம் | பூதத்தாழ்வார் – யஜுர் உபாகர்மா | |
| 27.08.18 | 11 | பிரதமை | திங்கள் | சதயம் | காயத்ரீ ஜபம் – பேயாழ்வார் | |
| 28.08.18 | 12 | த்விதீயை | செவ்வாய் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 29.08.18 | 13 | திருதீயை | புதன் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 30.08.18 | 14 | சதுர்த்தி | வியாழன் | ரேவதி | திருப்பவித்ரோத்சவம், தேசிகன் உத்ஸவம் பந்தக்கால் முகூர்த்தம் காலை 9.30 – 10.30 – துலா லக்னம் திருமால்வடை | |
| 31.08.18 | 15 | பஞ்சமி | வெள்ளி | அஸ்வினி | திருமால்வடை | |
| 01.09.18 | 16 | ஷஷ்டி | சனி | பரணி | திருமால்வடை | |
| 02.09.18 | 17 | ஸப்தமி | ஞாயிறு | கார்த்திகை | கோகுலாஷ்டமி – முநித்ரய, வைகாநச ஸ்ரீஜயந்தி – திருமங்கையாழ்வார் | |
| 03.09.18 | 18 | அஷ்டமி | திங்கள் | ரோஹிணி | ஸ்ரீபாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தி மாலை ஸ்ரீ கண்ணன் திருமஞ்சனம் | ஸ்ரீ S. விஜய ராகவன் |
| 04.09.18 | 19 | நவமி / தசமி | செவ்வாய் | மிருகசிரீஷம் | உறியடி உத்ஸவம் – மாலை பொழுதுடன் ஆராதனம் – பெருமாள், கண்ணன் வீதி புறப்பாடு | ஸ்ரீ S. விஜய ராகவன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05.09.18 | 20 | தசமி (14.18) / ஏகாதசி | புதன் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 06.09.18 | 21 | ஏகாதசி (8.21) / த்வாதசி | வியாழன் | புனர்வஸு | குலசேகராழ்வார் | |
| 07.09.18 | 22 | த்வாதசி (2.18) / த்ரயோதசி | வெள்ளி | புஷ்யம் | திருமால்வடை | |
| 08.09.18 | 23 | சதுர்த்தசி | சனி | ஆயில்யம் | திருமால்வடை | |
| 09.09.18 | 24 | அமாவாசை | ஞாயிறு | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 10.09.18 | 25 | பிரதமை | திங்கள் | பூரம் | ஆண்டாள் | |
| 11.09.18 | 26 | த்விதீயை | செவ்வாய் | உத்திரம் / ஹஸ்தம் | ராமாநுஜ தயா பாத்ர உத்ஸவம் – தேசிகன் கண்ணாடி அறை எழுந்தருளல் | வேத பாராயண ஸபா |
| 12.09.18 | 27 | திருதீயை | புதன் | சித்திரை | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் – 1ம் நாள் – காலை பல்லக்கு புறப்பாடு – தேசிகன் திருமஞ் சனம் – மாலை யாளி வாஹனம் புறப்பாடு | |
| 13.09.18 | 28 | சதுர்த்தி | வியாழன் | ஸ்வாதி | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் – 2ம் நாள் – காலை பல்லக்கு புறப்பாடு – தேசிகன் திருமஞ்சனம் – மாலை சூர்யப்ரபை புறப்பாடு | |
| 14.09.18 | 29 | பஞ்சமி | வெள்ளி | விசாகம் | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் – 3ம் நாள் – காலை பெருமாள் தங்க கருடன், தேசிகன் தங்க கேடயம் புறப்பாடு – தேசிகன் திருமஞ்சனம் – மாலை சிம்ம வாஹனம் புறப்பாடு திருத்தேர் கலச ஸ்தாபனம் மாலை 7.00 – 7.30 மணிக்குள் – மீன லக்னம் | |
| 15.09.18 | 30 | ஷஷ்டி | சனி | அனுஷம் | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் – 4ம் நாள் – காலை பல்லக்கு புறப்பாடு – தேசிகன் திருமஞ் சனம் – மாலை சந்திரப்ரபை புறப்பாடு | |
| 16.09.18 | 31 | ஸப்தமி | ஞாயிறு | அனுஷம் / கேட்டை | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் – 5ம் நாள் – காலை பல்லக்கு புறப்பாடு – தேசிகன் திருமஞ் சனம் – மாலை ஹம்ஸ வாஹனம் புறப்பாடு | |
| 17.09.18 | 1 | அஷ்டமி | திங்கள் | கேட்டை | புரட்டாசி மாதப்பிறப்பு – சூர்ணா பிஷேகம், தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 6ம் நாள் – காலை பல்லக்கு புறப்பாடு – தேசிகன் திருமஞ்சனம் மாலை குதிரை வாஹனம் புறப்பாடு | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18.09.18 | 2 | நவமி | செவ்வாய் | மூலம் | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் – 7ம் நாள் – காலை பல்லக்கு புறப்பாடு – தேசிகன் திருமஞ் சனம் – மதியம் – ஶ்ரீஹயக்ரீவ ஆராதனம் – ஶ்ரீ ஹயக்ரீவன் திருமஞ்சனம் – மாலை புஷ்ப பல்லக்கு புறப்பாடு | |
| 19.09.18 | 3 | தசமி | புதன் | பூராடம் | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் – 8ம் நாள் – காலை மேனா பல்லக்கு புறப்பாடு – தேசிகன் திருமஞ்சனம் – மாலை யானை வாஹனம் புறப்பாடு | |
| 20.09.18 | 4 | ஏகாதசி | வியாழன் | உத்திராடம் | தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 9–ம் நாள் காலை திருத்தேர் புறப்பாடு 3.00 – 3.30 – கடக லக்னம் தேசிகன் திருமஞ்சனம் மாலை தோட்ட உத்ஸவம் – தங்கக்கேடயம் புறப்பாடு | |
| 21.09.18 | 5 | த்வாதசி | வெள்ளி | திருவோணம் | தேசிகன் அவதார உத்ஸவம் – காலை மங்களாசாஸனம் – பெருமாள், தேசிகன் பலாத்தோப்பு எழுந்தருளல் – பெருமாள், தாயார், தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், தேசிகன் பத்தி உலாத்தல், தேசிகன் ஒய்யாளி, திருமொழி சாற்றுமுறை – இரவு – தேசிகன் மங்களகிரி வீதி புறப்பாடு – ஸேவாகாலம், திருவாய்மொழி சாற்றுமுறை | |
| 22.09.18 | 6 | த்ரயோதசி | சனி | அவிட்டம் | காலை – தேசிகன் கந்தபொடி வசந்தம் – தேசிகன் விடாயாற்றி 1ம் நாள் காலை – தேசிகன் திருமஞ்சனம் – பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம் – சேனைநாதன் வீதி புறப்பாடு | |
| 23.09.18 | 7 | சதுர்த்தசி | ஞாயிறு | சதயம் | தேசிகன் விடாயாற்றி 2ம் நாள் காலை – தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பவித்ரோத்ஸவம் அதிவாசம் | |

**Sponsorships and donations towards publication expenses are welcome**








ஆடி வருஷப் பிறப்பு உத்ஸவம்



ஸ்ரீ:







ஆடி வெள்ளிக்கிழமை புறப்பாடு










ஆடி வெள்ளிக்கிழமை புறப்பாடு




ஆடி உத்திரம் புறப்பாடு










ஆடி கருடன், ஆளவந்தார் திருநக்ஷத்ரம்





ஆடி கருடன், ஆளவந்தார் திருநக்ஷத்ரம்







திரு ஆடிப்பூர உத்ஸவம்











திரு ஆடிப்பூர உத்ஸவம்



ஸ்ரீ:





ஏகாதசி உத்ஸவம்



ஹஸ்தம் புறப்பாடு



சதய உத்ஸவம் - ஸ்ரீ பேயாழ்வார்

ஸ்ரீ:

# பரிமுகமாய் அருளிய எம் பரமன்

(ஸ்ரீபெரும்பூதூர் தட்டை ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்)

கண்ணபிரான் தானருளிய கீதையில் நான்காவது அத்யாயத்தில் ''அஜோபி ஸந் அவ்ய யாத்மா'' என்னும் ஶ்லோகத்தில் தன்னுடைய அவதாரங்கள் அனைத்தும் ஸங்கல்பாதீநத் தாலேயே உண்டாகின்றது, கர்மாவினால் அன்று என்றும், ''பரித்ராணாய ஸாதூநாம்'' எனும் ஶ்லோகத்தில் ஸாதுக்களுக்கு அபயம் கொடுத்து தர்மத்தை நிலை நாட்டுவதே தன்னுடைய அவதாரத்தின் முக்கிய நோக்கம் என்றும் துஷ்டர்களை ஸம்ஹரிப்பது பயிரில்களை எடுப்பது போன்றாதாகும் என்றும் தன்னுடைய அவதார ரஹஸ்யத்தை வெளியிடு கிறான்.



அவாப்த ஸமஸ்த காமனான அந்த ஸ்ரீமந் நாராயணன் எண்ணற்ற அவதாரங்களை எடுத்து சேதன வர்கங்களை காப் பாற்றி அவனை அண்டிவரும் பக்தர்களுக்கு ஸகல ஐஶ்வர் யங்களையும் அளித்து அப்பக்தர்களின் தேஹ அவஸானத்திற்கு பின் நித்ய ஆநந்தமான ஸ்ரீவைகுண்ட திவ்யலோகத்தில் கைங் கர்யம் செய்யும்படி அருளு கிறான்.

இவ்வவதாரங்களில் மிகவும் முக்கியமானதும், பல ஆசார்யர்களால் உபாஸிக்கப்பட்டதுமான ஸ்ரீ ஹயக்ரீவமூர்த்தியைப் பற்றி யதாமதி இங்கு விண்ணப்பிக்கிறேன்.

### பரிமுகப்பெருமானின் அவதார மஹிமை

முன்பொரு ப்ரளைய காலத்தில் எம்பெருமான் சதுர்முக ப்ரஹ்மாவைப் படைத்து அவருக்கு வேதங்களைஉபதேசம்செய்து அவரைக்கொண்டு உலகைப் படைக்க நியமித்தான். பின்பு ப்ரஹ்மா ஒரு தாமரை இலையில் அமர்ந்து வேதங்களைக் கொண்டு படைக்கும் தொழிலில் ஈடுபட்டார். அந்த இலையில் ஜலபிந்துக்கள் இருந்தன. பகாவானுடைய ஸங்கல்பத்தினால் மது மற்றும் கைடபன் என்னும் இரண்டு அசுரர் களாக அப்பிந்துக்கள் மாறின. அந்த அசுரர்கள் ப்ரஹ்மாவிடம் இருந்த வேதங்களை அபகரித்து ஜலத்துக்குள் மறைத்து ஓரிடத்தில் ஒளித்து வைத்து ஸ்ஞ்சாரம் செய்தனர்.

அப்பொழுது செய்வதறியாமல் திகைத்த நான்முகன் எம்பெருமானைக் குறித்து தோத்திரம் செய்து அவனை வசீகரித்து வேதங்களை மீட்டுக் கொடுக்குமாறு வேண்டினார். பகவானும் நான்முகனின் நிலைமையைக் கண்டு இரங்கி அவருக்கு வேதத்தை காப்பாற்றி கொடுப்பதாக அபயம் செய்தார். உடனே பகவான், கழுத்துக்குமேல் குதிரை முகமும் கழுத்துக்குகீழ் மானிட உருவமும் வெண்மை நிறமும் கொண்டு ஸ்ரீஹயக்ரீவ மூர்த்தியாக அவதாரம் செய்து ஜலத்துக்குள் மூழ்கி வேதங்கள் ஒளித்து வைக்கப் பட்டிருக்கும் இடத்தைஅறிந்து, வேதங்களை மீட்டு ப்ரஹ்மாவிடம் கொடுத்து மீண்டும் படைப்பு தொழிலில் ஈடுபடுமாறு நியமித்தார்.

இதை அறிந்த மது கைட பர்கள் பரிமுகப்பெருமானிடம் போர் செய்யத் துணிந்தனர். எம்பெருமானும் அவ்வசுரர்களிடம் சண்டையிட்டு அவர்களை அழித்தான். பின்பு பிரமனுக்கு ஞானவிகாசம் உண்டாகும்படி அனுக்ரஹித்து தன்னுடைய அவதாரத்தை ஸமாப்தி செய்தான்.

பகவானின் இந்த அவதார உபாக்யானம் ஸ்ரீமஹாபாரதம் சாந்தி பர்வத்தில் மிகவும் ச்லாக்யமாக விவரிக்கப்படுகிறது.

### வேதங்களில் பரிமுகனைப்பற்றி

க்ருஷ்ண யஜுர்வேத ஸம்ஹிதை நாலாம் காண்டத்தில் ஆறாம் ப்ரச்னத்தில் ''வாசஸ் பதிம் விஶ்வ கர்மா'' என்று தொடங்கும் வாக்யம்

ஸ்ரீஹயவதனனைப் போற்றுகிறது. மேலும் ஶ்வேதாஶ்வதர உபநிஷதம் மற்றும் பல சாகைகளில் ஹயவதனனை மங்களாசாஸனம் செய்கிறான் வேதபுருஷன்.

### ஆழ்வார்களின் ஈரச்சொற்களில் ஸ்ரீஹயக்ரீவன்

திருமங்கை மன்னன் பெரிய திருமொழி ஐந்தாம் பத்தில் திருவெள்ளறை என்னும் திவ்யதேச மங்களாசாஸன ஸமயத்தில், எவ்வாறு அந்த பிரமனிடம் உள்ள வேதம் தொலைந்தவுடன் அதை மீட்டுக்கொடுத்து அப்பிரமனுக்கு ஞானத்தை ஸ்ரீ ஹயவதனன் அநுக்ரஹித்தானோ அதே போன்று தனக்கும் அநுக்ரஹிக்க வேண்டும் என்று பரிமுகனான புண்டரீகாக்ஷனை வேண்டுகிறார்.

இதே ஆழ்வார் பெரிய திருமொழி ஏழாம் பத்தில் தேரழுந்தூர் என்னும் திவ்ய தேசத்தில் செந்தாமரைமேல் வீற்றிருக்கும் திருவுக்கும் திருவாகிய செல்வன் யாரென்னில், முன்பொருநாள் இந்த ஏழுலகங்களையும் அஞ்ஞானமாகிய இருள் தன் வசமாக்கிக்கொள்ள, அதனால் முனிவர்களும் தானவர்களும் திகைத்து நிற்கும் காலத்தில் பரமபதத்திலிருந்து மிகக்கருணையுடன் வந்து வேதங்களையும் அதன் அர்த்தங்களையும் ஹயக்ரீவனாய் அவதரித்து சதுர்முகனுக்கு உபதேசம் அருளிய எம் பரமனே என்று துதிக்கிறார்.

ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார், திருவாய்மொழி இரண்டாம் பத்து எட்டாம் தச கத்தில் எம்பெருமான் தானொருவனாகவே ஓவாத இந்த பிறவித்துயர் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலிய அனைத்தையும் ரக்ஷிக்கிறான். இவ்வாறு செய்வதினால் இவனுடைய மேன்மை குறையாதபடி அந்த தேவாதி தேவனான பரம பாவனனான நாராயணனே வித்யா ப்ரகாசமான அவதாரமான ஸ்ரீஹயக்ரீவ மூர்த்தியாகவும் மற்ற அவதாரங்களான மத்ஸ்ய, கூர்ம, ராம, க்ருஷ்ண அவதாரங்கள் எடுத்து தான் தொழுதுய்யும் படி எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியாகவும் விளங்குகிறான் என்று போற்றுகிறார்.

நம் மயிலையில் வந்தவதரித்த தமிழ்த் தலைவன் பேயாழ்வார் தம்முடைய மூன்றாம் திருவந்தாதி அறுபத்து ஆறாம் பாசுரத்தில் மதுகைடப வதத்தைக் கூறி ஸ்ரீஹயக்ரீவனின் அவதாரத்தை மிகவும் விசதமாக மங்களாசாஸனம் செய்கிறார்.

### ஆசார்யர்களின் பாட்டுக்களில் தயாநிதி

நம் வைஷ்ணவ தரிசனத்தின் ஸ்தாபகரான எம்பெருமானாரின் முதன்மை சிஷ்யரும் முக்குறும்பை அறுத்தவருமான கூரத்தாழ்வான், தம்முடைய ஸுந்தரபாஹு ஸ்தவம் என்னும் நூலில் எம்பெருமானின் திருத்துடைகளை மங்களாசாஸனம் செய்யும் ப்ரகரணத்தில் ஐம்பத்தி ஒன்பதாம் ஶ்லோகத்தில், துஷ்ட மதுகைடபர்களைதன்னுடைய திருத்துடைகளில் இறுக்கி அவர்களை ஸம்ஹாரம் செய்தான் பரிமுகனான சுந்தரராஜன் என்று போற்றுகிறார்.

இந்த மஹாசார்யரின் திருக்குமாரரும் ஸ்ரீரங்க புரோஹிதருமான பராசரபட்டர் தம்முடைய ரங்கராஜஸ்தவ பூர்வ ஶதகத்தில் நூற்றி பதினெட்டாவது ஶ்லோகத்தில் ஸ்ரீரங்கநாதனின் திருத்துடைகளை மங்களாசாஸனம் செய்யும் ஸமயத்தில் ஸ்ரீ ஹயவதனனின் மதுகைடப வதத்தை எடுத்துரைத்து அந்த பரிமுகனே ரங்கநாதனாக அர்ச்சை வடிவு கொண்டு ஸேவை ஸாதிக்கிறான் என்று பாடுகிறார்.

நம் தூப்புல் குலமணி ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீஹயக்ரீவனைப் பற்றிப் பல இடங்களில் அருளிச்செய்துள்ளார். இந்த வாகீசப்பெருமாளுக் கென்றே ப்ரத்யேகமாக முப்பத்து மூன்று ஶ்லோகங்களால் தம்முடைய அவாவெல்லாம் தீரும்படி மங்களாசாஸனம் செய்கிறார்.

இதில் முதல் ஶ்லோகத்தில் ஸ்ரீஹயக்ரீவப் பெருமான் ஞானம் ஆனந்தம் இவற்றின் வடிவமாய் நின்று மாசற்ற படிகமணிபோல் தூய வெண்மை நிறங்கொண்ட திருமேனியோடும் உலகிலுள்ள எல்லா கலைகளுக்கும் உறைவிட மாகவும் அவற்றை அனைவருக்கும் அருளும் தெய்வமாகவும் நிற்கிறான் என்று போற்றுகிறார்.

ஐந்தாவது ஶ்லோகத்தில் ஞான வடிவமான, கருணைக் கடலான அந்த பரிமுகன் சேதனர் களுக்கு அருளுவதையே கடமையாக கொண்டு நல்வழிப் படுத்துகின்றான் என துதிக்கிறர். அப்பேர்ப்பட்ட அந்த தயாநிதியை, ஞானம் பெற வேண்டி தானும் திருவடி தொழுவதாக சரணமடைகிறார். மேலும் ஒரு ஶ்லோகத்தில் கங்கைவெள்ளத்தின்வேகத்தையும்மந்தபடுத்தும் ஆற்றல் படைத்த வாக்ப்ரவாஹத்தை கணநேரம் ஹயக்ரீவனைச் சிந்தனை செய்பவர் பெறுவர் என்று போற்றுகிறார்.

கடைசியாக ஸ்வாமி தேஶிகன் எந்த வாகீசப் பெருமாளின் அருளால் தாம் கவிதார்கிக ஸிம்ஹம் என்று பெயர் பெற்றாரோ அதே போல் கவி பாடும் வல்லமையும் உண்மை பொருள்களைப்பற்றிய சிறந்த அறிவையும் பெறுவதற்கு ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தை தினமும் கூறினால் நிச்சயம் பெறுவார்கள் என்று அறிதியிடுகிறார்.

மேலும் தம்முடைய ரஹஸ்யத்ரய ஸாரம் என்னும் மஹாக்ரந்தத்தில் அந்த நூலின் உட்பொருள்கள் அனைத்தும் தம்முடைய உள்ளத்தில் எழுதியதும் ஒலையில் இட்டதும் அந்த பரிமுகனே என்று முடிக்கிறார்.

**ஸ்ரீஹயவதனின் லீலாவினோதங்கள்**

ராம க்ருஷ்ண அவதாரங்களைப் போன்று ஸ்ரீஹயவதனனும் ஆசார்யர்களின் வாழ்க்கையில் லீலைகளைப் புரிந்து அவர்களுக்கு அநுக்ரஹத்தைப் பொழிந்துள்ளான். ஸ்வாமி எம்பெருமானார் வேதவ்யாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரத்தின் உண்மையான பொருளை உரையாக எழுதியதை ஶ்லாகித்து ஸரஸ்வதி தேவி தாம் அநவரதம் தொழும் அழகியதொரு ஹயக்ரீவ மூர்த்தியை ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரரிடம் எழுந்தருளப்பண்ணி கொடுத்தாள் என்றும், அம்மூர்த்தியே ஸ்வாமி தேஶிகனின் ஆராத்ய தெய்வமாக இருந்தான் என்றும் குருபரம் பரைகளில் தெரிய வருகிறது.

கருடபகவானிடம் உபதேசம் பெற்ற ஸ்ரீஹயக்ரீவ மஹாமந்த்ரத்தினாலேயே ஸ்வாமி தேஶிகன் நாநாவித ஶாஸ்த்ர ஜ்ஞானம் பெற்று விளங்கினார் என்பது ஸுப்ரஸித்தம். ஸ்வாமி தேஶிகனின் சரித்ரத்தில் ஸ்ரீ ஹயவதனன் பல லீலைகளை புரிந்துள்ளதை நாம் கண்டு கொள்ளலாம்.

நம் மயிலை ஸ்ரீவேதாந்த தேஶிகர் தேவஸ் தானத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் கையில் புஸ்தகம் மற்றும் வ்யக்யாமுத்திரையுடன் சங்கு சக்ர தாரியாய் சிறிய மூர்த்தியாகவும் பெரியமூர்த்தியாகவும் இரண்டு திவ்ய மங்கள ரூபம் கொண்டு அழகிய உருக்கொண்டு அண்டி வரும் பக்தர்களின் இன்னல்களைப் போக்கி அபயம் அளிக்கிறான் ஸ்ரீஹயக்ரீவன்.

நிகழும் விளம்பி வருஷம் ஆவணீ மாதம் ஒன்பதாம் தேதி (25.08.2018) சனிக்கிழமை திருவோணத் திருநாள் அன்று ஸ்ரீஹயக்ரீவ அவதாரஜயந்தியை முன்னிட்டு நம் தேவஸ்தானத் தில் ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவனுக்கு விசேஷ திருமஞ்சனம், அலங்காரம் மற்றும் சாற்றுமுறை களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்த வர்கங்கள் பரிமுகனின் அநுக்ரஹத் திற்குப் பாத்ரமாகி ஸர்வ அபீஷ்டகங்களும் பெற்று ஸ்வாமி தேஶிகனின் கருணைக்கும் இலக்காகி இன்புறலாம்.

## ஸ்ரீஹயக்ரீவனை வணங்கும் வழி மற்றும் பலன்

‘ஸ்ரீ ஹயக்ரீவ கல்பம்’ எனும் நூல் இவ்வெம்பெருமானை எவ்வாறு உபாஸிக்க வேண்டும் என்றும் மற்றும் அவ்வாறு தொழுவதனால் உண்டாகும் பயன் என்ன என்பதையும் கூறுகிறது.

இரண்டு திருக்கைகளுடன் ஒன்றில் ஜ்ஞான முத்ரையுடனும் மற்றொன்றில் புத்தகத்துடனும் எழுந்தருளியிருக்கும் ஹயக்ரீவனை வழிபட்டால் குழந்தைப் பேறும், நான்கு திருக்கைகளுடன் வலது திருக்கைகளில் ஒன்றில் ஜப மாலை மற்றொன்றில் தாமரை புஷ்பம் இடது திருக்கைகளில் புஸ்தகம் மற்றும் முத்திரை உள்ள எம்பெருமானை வணங்கினால் நல்ல வாக்கின் ஐஸ்வர்யத்தையும் பெறலாம்.

பெரிய ஆசார்ய ஸ்தானத்தை அடைய விரும்புவர்களுக்கும் அனைத்துப் பலன்களை அடைய ஆசைப்படுபவர்க்கும் சங்கு சக்ர தாரியாய் இன்னுமொரு வலது திருக்கையில் வ்யாக்யா முத்திரையுடன் இன்னுமொரு இடது திருக்கையில் புத்தகத்துடன் கூடிய சதுர்புஜ வாகீஶனை உபாஸிக்கவேண்டும் என்றும், ஊமையாய் இருப்பவனை பேசும்படி செய்ய விரும்புகிறவர்களுக்கு யோக மூர்த்தியாய் ஸேவை ஸாதிக்கும் ஹயக்ரீவனை உபாஸிக்க வேண்டும் என்றும், மோக்ஷம் மற்றும் ப்ரஹ்மஜ்ஞானத்தை அடைய இச்சி க்கிறவர்களுக்கு ஆறு, எட்டு, பத்து மற்றும் பன்னிரண்டு திருக்கைகளுடன் கூடிய ஹயக்ரீவ மூர்த்தியை உபாஸிக்க வேண்டும் என்று அந்நூல் எடுத்துரைக்கின்றது.

ஸ்ரீ:

## சிறுவர்க்காக

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

**பங்கஜம் பாட்டி:** ஸ்வாமி தேஶிகன், வட தேஶ யாத்ரையா கௌம்பி, மொதல்ல திருமலை வேங்கடவனை 'தயாஶதகம்' எனும் 108 ஶ்லோகங்கள் கொண்ட ஸ்தோத்ரத்தால் மங்களாஶாஸநம் செய்தார். அங்கேர்ந்து பொறப்பட்டு ....

**ஸுமதி :** ஸாரி பாட்டீ! ஸ்வாமி திருமலைலேர்ந்து கௌம்பினாலும், எம்மனஸு இன்னும் அங்கயே இருக்கு. ஆச்சர்யமா இருக்கா? சொல்றேன் ... அந்த பெருமாளுக்கு வேங்கடேஶன்-னு பேரு; ஸ்வாமிக்கும் அதே பேரு. அப்படீன்னா அந்த வார்த்தைக்கு ஏதோ விஶேஷம் இருக்குன்னு நெனைக்கிறேன். சொல்லுங்கோ பாட்டி.

**பங்கஜம் பாட்டி:** நீ இப்படி துருவித் துருவி கேக்கறது எனக்கு ஸந்தோஷமா இருக்கு. சொல்றேன் கேளு. நம்ம ஸம்ப்ரதாயத்திலே, தேவ-பாஷையான வடமொழி ; மஹர்ஷி அகஸ்த்யரால் பரிஶுத்தப்படுத்தப்பட்ட தென்மொழியான தமிழ், இரண்டையுமே - இரு கண்கள்போல் - வழக்கத்தில் கொண்டுள்ளார்கள். வேங்கடேஶன் என்ற இந்த சொல், இவ்விரண்டு பாஷைகளிலும் ஒரே பொருளைத் தரதா - அதுவும் நம் போல் உலகில் அவதிப்படுபவரின் - ''விடுதலைக்கு உபாயமாக இருப்பவர்'', என அர்த்தம் கொடுக்கிறது.

எப்படீ-ன்னு கேக்கறயா - வடமொழியில வேங்கட: = வேம் + கட:, அதாவது கஷ்டங்களை + நீக்குபவர் எனப் பொருள். இதுவே தமிழில், கட + வேம், அதாவது கஷ்டங்களை + விரட்டுபவர் எனப் பொருள் கொடுக்கிறது. ஆக ரெண்டு மொழியிலும் ஒரே அர்த்தத்தைத் தருகிறது. அதுபோலவே, பெருமாளும் நம் கஷ்டங்களை விரட்டுபவராக இருக்கிறார்; ஆசார்யரான ஸ்வாமி தேஶிகனும் நம் கஷ்டங்களை விரட்டுபவராக ஆவார். இவ்வளவால் இருவருக்குமே இப்பெயர் பொருந்துகிறது. இப்ப புரியறதா இதன் விஶேஷம்!

**ஸுமதி :** இன்னும் ஒரு கேள்வி - பெருமாளை ஸ்தோத்ரம் பண்ணாமல், அவரோட 'தயையை'ப் புகழ்கிறாரே, இது பொருத்தமா? இன்னும் பெருமாளுக்கு எத்தனையோ குணங்கள் உண்டாச்சே; அவைகளை விட 'தயை' என்ன அவ்வளவு ஒசத்தியா?

**பங்கஜம் பாட்டி :** நன்னா கேட்டே. ஒருத்தரோட குணம்-ங்க்றது, அவரைவிட்டுப் பிரிக்க முடியாது; அதனால தயையைப் பாடினாலும் அவரைப் பாடறதுதான். இன்னும், ஒருத்தரிடம் தயை இருக்குன்னு சொல்றதைவிட, அவரே தயை-ன்னா, அது நெறைய இருக்குன்னு அர்த்தம். நீ இங்க்லீஷ் poetry-ல படிச்சிருப்பயே - personification-ன்னு, இதுதான் அது.

அடுத்து, 'தயை' குணம் என்ன ஒசத்தி-ன்னு கேட்ட. இதுக்கு, ஸ்வாமியே இந்த ஸ்தோத்ரத்தில பதில் சொல்றார் - ''எம்பெருமானே! உன்னிடம் எல்லா கல்யாண குணங்களும் இருந்தபோதிலும், இந்த 'கருணை'ங்க்றது ஒண்ணுமட்டும் இல்லேன்னா, மத்ததெல்லாம் ப்ரயோஜனமில்லாம, தோஷமாக ஆயிடும்'' - னு.

**ஸுமதி :** நன்னா புரிஞ்சுது பாட்டீ. உங்களுக்கு இங்க்லீஷ்-லாம் கூட தெரிஞ்சிருக்கே! ஸரி, திருமலைக்கு அப்பறம், எங்கெங்கே ஏள்ளினார் பாட்டீ.

**பங்கஜம் பாட்டி :** திருமலைலேர்ந்து புறப்பட்டு, நீண்ட யாத்ரையாக ப்ருந்தாவனம், திருவயோத்தி, சாளக்ராமம், பதரீகாஶ்ரமம் முதலிய வடநாட்டுத் திருப்பதிகளை சென்று ஸேவித்தார்.

**ஸுமதி :** பாட்டீ ! பாட்டீ !! திருமலையைத்தான் 'திருப்பதி'-ன்னு சொல்லுவா; இந்த வடதேச க்ஷேத்ரங்களையும் திருப்பதி-ன்னு சொல்றேளே, எப்படி?

**பங்கஜம் பாட்டி:** நம்ம வைஷ்ணவ பரிபாஷை-ல (வழக்கு) பெருமாள், கோயில் கொண்டு எள்ளியிருக்கும் எல்லா ஸ்தலத்தையுமே 'திருப்பதி'-ன்னுதான் குறிப்பிடுவா. 'பதி' ன்னா இருப்பிடம்-னு அர்த்தம். பெருமாள், தாயாரோடு அந்த ஊர்ல எப்போதும் இருப்பதனாலயும்; அதுக்கு எல்லா ஸம்பத்தும் இருக்கறதாலும், அவைகளின் ஊர்ப்பெயரோட 'திருப்பதி'-ன்னு சேர்த்து அழைப்பா.

**ஸுமதி :** ஸரி பாட்டீ ! அப்போ, திருமலையை, வெறும் 'திருப்பதி'-ன்னு மட்டும் ஏன் சொல்றா.

**பங்கஜம் பாட்டி :** (சிரிச்சிண்டே) ஆமா; அப்படி ஊர் பேரையும் சொல்லாம, 'திருப்பதி'-ன்னு மட்டும் கூப்படறது, மத்ததைக் காட்டிலும் இது ரொம்ப ஒசத்தி-ன்னு காட்றதுக்காக. இப்போ, 'தேஶிகன்'-ற சொல் இருக்கோல்யோ, அதுக்குப் பொதுவா ஆசார்யன்னு அர்த்தம். இருந்தாலும், ஆசார்யர்களுக்குள்ள சிறந்தவர் அப்படீங்கறத் தினால, தூப்புல் ஆசார்யரை, 'தேஶிகன்' என்று மட்டும் சொல்லி அழைக்கிறோம், இல்லையா? அதுபோல்தான்.

அப்பறம்... எங்க விட்டேன் - ஆங், ஸ்வாமி வடதேசத்திலேர்ந்து திரும்பி,

திருஎவ்வுளூர், ஸ்ரீபெரும்பூதூர், திருவல்லிக் கேணி, திருநீர்மலை போன்ற தொண்டை நாட்டு திருப்பதிகளை ஸேவித்துகொண்டு, பெருமாள் கோயில் அடைந்து, சிலகாலம் அங்கேயே ஶிஷ்யர்களுக்கு காலக்ஷேபங்கள் ஸாதித்துக் கொண்டு எள்ளியிருந்தார்.

அந்த ஸந்தர்ப்பத்துல, ஸ்வாமிக்கு ஒரு புத்ரன் பிறந்தான். தேவப்பெருமாளோட அநுக்ரஹத்தால் பிறந்த குழந்தை என, அவனுக்கு 'வரதன்' என பேர் இட்டு, உரிய காலங்கள்-ல வித்யாப்யாஸம்-உபநயனம் வரையில் ஸம்ஸ்காரங்களையெல்லாம் செய்து வைத்தார். அவரும், சுடர்லேர்ந்து கொளுத்தின தீவட்டி போல் ப்ரகாஶித்து, 'ஸ்ரீபாஷ்யகார ஸித்தாந்த விஜய த்வஜர்'-ன்னு மரியாதையோடு அழைக்கப்படறவரா இருந்தார்.

**ஸுமதி :** பாட்டீ ! ஸ்வாமி தேஶிகனை, 'பற்பல கலைவல்ல பாவலன்'-ன்னு சொல்றாளே, அப்படீன்னா என்ன ?

**பங்கஜம் பாட்டி:** ஆமாம்; ஒரு ஸமயம் ஸ்ரீரங்கநாயகித் தாயார் அவருக்கு 'ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரர்'-னு விருதை அளித்தார் - அந்தக் கதையை அப்பறமா சொல்றேன். இதைத்தான் இங்க்லீஷ்-ல Multi & faceted & personality-ன்னு சொல்வா. - அதாவது, வேதாந்த ஶாஸ்த்ரக் கல்வி-ல / வாதம் செய்யும் திறமை-ல / மந்த்ர-ஸித்தி-ல / கை வண்ணத்துல இன்னும் ஜ்ஞாநம்-வைராக்யம் போன்ற ஆத்ம குணத்துல - இப்படி பலவித திறன் கொண்டவராகத் திகழ்ந்தார்.

**ஸுமதி:** அப்படியா ! அந்த சரித்ரங்களை யெல்லாம் சொல்லுங்களேன்.

(தொடரும்)

---

## ஆவணியில் முக்கிய உத்ஸவங்கள்

**ச்ரவண உத்ஸவம், ஹயக்ரீவ ஜயந்தி**
ஆகஸ்ட் 25 (சனி)

**ஸ்ரீ பாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தி**
ஸெப்டம்பர் 3 (திங்கள்)

**உறியடி உத்ஸவம்**
ஸெப்டம்பர் 4 (செவ்வாய்)

**ராமாநுஜ தயா பாத்ர உத்ஸவம்**
ஸெப்டம்பர் 11 (செவ்வாய்)

**ஸ்வாமி தேசிகன் (750 வது திருநக்ஷத்ரம்) வார்ஷிக உத்ஸவம்**
ஸெப்டம்பர் 12 (புதன்) முதல் 10 நாட்கள்
ஸெப்டம்பர் 21 (வெள்ளி) சாற்றுமுறை

ஶ்ரீ:



*With Best Compliments From:*

# TVS Motor Company Limited,

**Jayalakshmi Estates,**

**8, Haddows Road, Chennai 600006.**

**SVDD thanks M/s. TVS Motor Company Limited**
for sponsoring this month's issue of Desika Sandesam





ஆடி ச்ரவண உத்ஸவம்



